

நாளை மாற்றுத்திறனாளிகள் குறைதீர் கூட்டம்

■ திருவாரூர், நவ. 4–

திருவாரூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர் கூட்டம் நாளை (5ம் தேதி) காலை 11மணிக்கு திருவாரூர் ஆர்டிஓ அலுவலகத்திலும், 2வது கூட்டம் வரும் 12ம் தேதி காலை 11 மணிக்கு மன்னார்குடி ஆர்டிஓ அலுவலகத்திலும் நடக்கிறது. இக்கூட்டத்தில் எழுத்து பூர்வமாக அளிக்கப்படும் மனுதாரர்களின் கோரிக்கைகள் அனைத்தும் அரசின் விதிகளுக்குட்பட்டு பரிசீலிக்கப்படுவதோடு, குறைகளுக்கு தீர்வு காணும் வகையில் உள்ள மனுக்களுக்கு உரிய உதவிகள் வழங்கிட தக்க நடவடிக்கை உடனடியாக மேற் கொள்ளப்படும். மேலும், உதவி உபகரணங்கள், கடனுதவி, பராமரிப்பு உதவித்தொகை, வீட்டுமனை பட்டா, பட்டா இருப்பின் தொகுப்பு வீடு கோரு பவர்கள், நூறு நாள் அட்டை கோருபவர்களும் ஆகியவற்றிற்கான விண்ணப்பங்களை குறைதீர் கூட்டத்தில் அளித்து பயன்பெறலாம். இவ்வாறு கலெக்டர் மோகனசந்திரன் தெரிவித்துள்ளார்.

காவல் உதவி மையம் திறப்பு

■ காரைக்கால், நவ. 4–

நிரவி காவல் சரகத்துக்குட்பட்ட விழிதியூர் அருகே மானம்பேட்டையில் காவல்துறையின் கட்டுப்பாட்டிலிருந்த கட்டடம் பயன்பாடின்றி இருந்தது. ஓஎன்ஜிசி சமூக பொறுப்புணர்வு திட்டத்தில் ரூ.2.50 லட்சம் தரப்பட்ட நிலையில் இக்கட்டட சீரமைப்புப் பணி முடிந்து காவல் உதவி மையம் என்ற பெயரில் திறக்கப்பட்டது. அமைச்சர் ராஜசேகரன் மையத்தை திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் சீனியர் எஸ்பி., வினய்குமார் காட்கே, எஸ்பி, சுந்தர்கோஷ், இன்ஸ்பெக்டர் லெனின்பாரதி, சப்இன்ஸ்பெக்டர் குமரன் மற்றும் ஓஎன்ஜிசி அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். தமிழக எல்லையோரத்தில் மானாம்பேட்டையில் அமைந்துள்ள இம்மையத்தில் போலீசார் ஷிப்டு முறையில் 24 மணி நேரமும் பணியில் இருப்பார்கள். பொதுமக்கள் புகார் தெரிவிக்கவும், குற்றச் சம்பவங்கள் நடக்கும்பட்சத்தில் விரைவாக அந்த பகுதிக்குச் செல்லவும் இம்மையம் பயன்படும் என்று காவல் அதிகாரிகள் தெரிவித்தனர்.



காரைக்கால் எல்லைப்பகுதியில் சீரமைப்பு செய்யப்பட்ட காவல் உதவி மையத்தை அமைச்சர் ராஜசேகரன் திறந்து வைத்தார். அருகில் சீனியர் எஸ்பி வினய்குமார் காட்கே, எஸ்பி சுந்தர்கோஷ் மற்றும் பலர்.

திருப்பாம்புரத்தில் 13ம்தேதி ராகுகேது பெயர்ச்சி

■ குடவாசல், நவ. 4–

குடவாசல் அருகே திருப்பாம்புரம் ஸ்ரீசேஷபுரீஸ்வரர் கோயிலில் வரும் 13ம்தேதி ராகு கேது பெயர்ச்சி விழா நடக்க உள்ளது. அன்று மாலை 5.14 மணிக்கு ராகு பகவான் கும்ப ராசியிலிருந்து மகர ராசிக்கும், கேது பகவான் சிம்ம ராசியிலிருந்து கடக ராசிக்கும் பெயர்ச்சி ஆகின்றனர். இதையொட்டி பரிகாரம் செய்ய வேண்டிய ராசிகள் மிதுனம், கடகம்,சிம்மம்,கன்னி தனுசு,மகரம், கும்பம், மீனம் ஆகியவை ஆகும். விழாவுக்காக கோயிலில் பந்தல் அமைத்தல், பக்தர்களுக்கு தேவையான குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்தல் உள்ளிட்ட பணிகள் நடந்து வருகின்றது. ஏற்பாடுகளை செயல் அலுவலர் ராஜராஜேஸ்வரன், தக்கார் முருகையன், மேலாளர் வள்ளிகந்தன், கோயில் பணியாளர்கள், கிராமவாசிகள் செய்து வருகின்றனர்.

தனியார் மருந்துக்கடைகளில் ஆய்வு

■ மயிலாடுதுறை, நவ. 4–

மயிலாடுதுறையில் மருந்து ஆய்வாளர் சுதர்சன், மதுவிலக்கு அமல்பிரிவு இன்ஸ்பெக்டர் ராஜேஷ், கலால் உதவி ஆணையர் மாணிக்க ராஜ் ஆகியோர் தனியார் மருந்துக்கடைகளில் ஆய்வு மேற்கொண்டனர். மன்னம்பந்தல் பகுதியிலுள்ள மெடிக்கல் ஷாப்பில் நார் கோடி மருந்துகள் டாக்டர் பரிந்துரை சீட்டுடன் உரியமுறையில் விற்பனை செய்யப்படுகிறதா என ஆய்வுசெய்தனர். அப்பகுதிகளில் வட மாநிலங்களில் இருந்து கூரியர் நிறுவனங்கள் வாயிலாக போதைப்பொருட்கள் அனுப்பி வைக்கப்படுகிறதா என்பது குறித்தும் விசாரணை மேற் கொள்ளப்பட்டது. மாவட்டத்திலுள்ள மெடிக்கல் களில் டாக்டர்கள் பரிந்துரை சீட்டு இல்லாமல், நார்கோடிக் மருந்துகள் விற்பனை செய்யக்கூடாது, போதைப்பொருள் தொடர்புடைய சந்தேகத்திற் குள்ளான கூரியர்களை பெறக்கூடாது எனவும், மீறி செயல்படுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டது.



மயிலாடுதுறை அருகே மன்னம்பந்தலிலுள்ள தனியார் மருந்துக்கடையில் மருந்து ஆய்வாளர் சுதர்சன் மற்றும் அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.



மன்னார்குடி ராஜகோபால சுவாமி அரசு கல்லூரியில் நடந்த சங்கம நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகளுடன் கல்லூரி முதல்வர் ராமு, பாரதிதாசன் பல்கலைகழக என்எஸ்எஸ் குழும ஒருங்கிணைப்பாளர் ராமஜெயம் மற்றும் பலர்.

கல்லூரி மாணவர்கள் சங்கம நிகழ்ச்சி

■ மன்னார்குடி, நவ. 4–

மன்னார்குடி ராஜகோபால சுவாமி அரசு கலைக்கல்லூரியில் மத்தியஅரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம், மாநில நாட்டு நலப்பணி திட்டம், கல்லூரி என்எஸ்எஸ் ஆகிய வற்றின் சார்பில் மாவட்ட அளவிலான கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்ற சங்கம நிகழ்ச்சி நடந்தது.

கல்லூரி முதல்வர் ராமு தலைமை வகித்தார்.பாரதிதாசன் பல்கலை கழக நாட்டு நலப்பணி திட்ட குழும ஒருங் கிணைப்பாளர் ராமஜெயம், மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சக உதவி இயக்குனர் நிசிடி யஸ் ஆகியோர் பேசினர். தமிழ்த்துறைத் தலைவர் பொம்மி உள்ளிட்ட துறைத் தலைவர்கள், என்எஸ்எஸ் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

நாட்டுப்புற குழு நடனம், நாட்டுப் புறக்குழு பாடல், கவிதை , ஓவியம் போன்ற போட்டிகளில் பல்வேறு கல் லூரிகளிலிருந்து மாணவர்கள் கலந்து கொண்டனர். நாட்டுப்புறக்குழு நடனம், நாட்டுப்புற குழுபாடல், கவிதை போட் டிகளில் நன்னிலம் அரசு கல்லூரி முத லிடமும், தெரு நாடகம், ஓவிய போட்டிகளில் மன்னார்குடி பான் செக் கர்ஸ் மகளிர் கல்லூரி முதலிடமும் பெற்றன. கல்லூரி என்எஸ்எஸ் அலு வலர் மாடசாமி நன்றிகூறினார்.



காரைக்காலில் விஸ்வபிர்ம சங்கம் சார்பில் தீபாவளியையொட்டி பொதுமக்களுக்கு புத்தாடை, இனிப்புகளை சங்க காப்பாளர் தண்டாயுதபாணி வழங்கினார். அருகில் தலைவர் சிவக்குமார் மற்றும் நிர்வாகிகள்.

ஏழை, எளியோருக்கு புத்தாடை வழங்கல்

■ காரைக்கால், நவ. 4–

காரைக்கால் இலைக்கார வீதியிலுள்ள விஸ்வபிர்ம சங்க சமுதாயக்கூடத்தில் விஸ்வபிர்ம சங்கம் சார்பில் தீபாவளியையொட்டி பொதுமக்களுக்கு புத்தாடை, இனிப் புகள் வழங்கப்பட்டன.

சங்க காப்பாளர் தண்டாயுதபாணி தலைமை வகித்தார். தலைவர் மீனம்சிவக்குமார் முன்னிலை வகித் தார். துணைத்தலைவர்கள் துரைராஜன், ராஜேந்திரன், செயலாளர் ஏகாம்பரம் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

இதில் பொதுமக்கள் மற்றும் ஏழை, எளியோர் 300 பேருக்கு வேட்டி, புடவைகள், இனிப்புகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் துணை செயலர்கள் தனுஷ்கோடி, விஜி, சேகர், பொருளாளர் சுவாமிநாதன், மகளிரணி தலைவி பஞ்சவர்ணம், இளைஞரணி தலைவர் கண்ணன், செயலர் செந்தில் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

பள்ளி முன்பு கம்பிவேலி வைப்பதில் பிரச்னை

■ திருவாரூர், நவ. 4–

திருவாரூர் புலிவலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி முன்பு பழுதடைந்த நிலையில் இருந்த கட்டடங்கள் கடந்தாண்டு இடிக் கப்பட்டன.

இதையடுத்து பிப்ரவரி மாதம் இடிக்கப்பட்ட கட்டட பகுதியில் பள்ளிக்கான சுற்றுச்சுவர் எழுப்ப முயன்றபோது அருகிலுள்ள பிடாரி அம்மன் கோயில் நிர்வாகிகள் தடுத்து நிறுத்தினர். ஜூன் மாதம் அந்த இடத்தில் கம்பிவேலி வைக் கவும் கோயில் நிர்வாகம் தடை போட்டது.

இந்நிலையில் சுற்றுச்சுவர் இருந்த இடத்தில் கம்பிவேலி வைக்க நடப்பட்ட கல்தூண்களை கோயில் நிர்வாகத்தினர் அகற்றியுள் ளனர். இதைக்கண்டித்து பெற்றோர் கள், பொதுமக்கள், மாணவர்களு டன் புலிவலத்தில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இதையடுத்து தாசில்தார் இளங் கோவன், டிஎஸ்பி ராஜேந்திரன் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தி யும் தீர்வு எட்டப்படாததால் மறி யலில் ஈடுபட்டவர்களை போலீசார் கைது செய்து பஸ்சில் ஏற்றினர். அப்போது பெற்றோர்களுக்கும், போலீசாருக்கும் இடையே தள்ளு முள்ளு ஏற்பட்டது. இதைக்கண்டு பஸ்சில் ஏறிய மற்றவர்களும் கீழ றங்கி போலீசாரை கண்டித்து மறி யலில் ஈடுபட்டனர்.

பெற்றோர்கள் சாலைமறியலால் பரபரப்பு



திருவாரூர் அருகே புலிவலத்தில் மாணவர்களுடன் சாலைமறியலில் ஈடுபட்ட பெற்றோர்கள், பொதுமக்கள்.

சுமார் 4 மணி நேர மறியலால் திருவாரூர் திருத்துறைபூண்டி மார்க்கத்தில் போக்குவரத்து பாதிக் கப்பட்டது. இதையடுத்து அதிரடி படை போலீசார் வரவழைக்கப் பட்டு மறியலில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

போலீஸ் கைது நடவடிக்கை யின்போது பாதிக்கப்பட்ட 4ம் வகுப்பு மாணவர்கள் இருவர் திரு வாரூர் அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட் டுள்ளனர். தள்ளுமுள்ளு ஏற்பட காரணமாயிருந்த போலீசார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெற்றோர்கள் வலியுறுத்தி யுள்ளனர்.

ரயில்வே மேம்பாலம் அமைக்க கோரிக்கை

■ திருத்துறைப்பூண்டி, நவ. 4–

திருத்துறைப்பூண்டி மன்னார்குடி சாலையிலுள்ள ரயில்வே கேட் அடிக்கடி மூடப்படுவதால் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடியால் பள்ளி, கல்லூரி செல்லும் மாணவ, மாணவிகள், மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் என பல்வேறு தரப்பினரும் தினந்தோறும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இதற்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் மன்னார்குடி சாலை யில் மேம்பாலம் அமைக்க வேண்டும். இங்கிருந்து அதிக எண்ணிக்கையில் பயணிகள் சென்னை போன்ற நகரங்களுக்கு சென்று வரும் நிலையில் ரயில் பெட் டிகளின் எண்ணிக்கையை சரிவர காண முடியாமல் மிகவும் சிரமப்படுகின்றனர்.

எனவே எளிதாக ரயில் பெட்டியை அடையாளம் காணும் நவீன மின்னணு ஒளிரும் பலகைகள் அமைக்க வேண்டும். ரயில்கள் வந்து செல்லும் கால அட்டவணையை மின்னணு ஒளிரும் பெயர்ப்பலகையில் அமைக்க வேண்டும். இவ்வாறு எம்பி செல்வ ராஜ் தலைமையில் மாவட்ட ரயில் உபயோ கிப்பாளர்கள் சங்க தலைவர் நாகராஜன், மாவட்ட செயலர் மணிமாறன் ஆகியோர் திருச்சி ரயில்வே கோட்ட மேலாளரிடம் அளித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிப்பு

புதுச்சேரி மாநிலம், காரைக்கால் மாவட்டம், காரைக்கால், அம்பகரத்தூர், எண்:22, புளியன் தோப்பு தெருவில், வசிக்கும் பிரகாஷ் மகன் பன்னீர் செல்வம் அவர்களின் SSLC மதிப்பெண் சான்றிதழ் எண்:501469/2006 கடந்த 19.07.2023 அன்று திருநள்ளார் வீதியில் உள்ள Xerox கடையில் நகல் எடுக்க சென்றபோது தொலைந்துவிட்டது கண்டெடுப்பவர்கள் அணுகவேண்டிய தொலைபேசி எண்: 63740 44164.

M.UMAMAHESHWARI, B.A, LLB., ADVOCATE & NOTARY, KARAIKAL. Cell: 99945 56908

BEFORE THE ADDITIONAL DISTRICT MUNSIF KARAIKAL
I A No: 1/2026 In O.S.No 372/2018
Mr.M. Thirumurugan ...Petitioner/Plaintiff
VS
1. Mr. Varadharajan
2. Mr.Meenatchisundaram
Respondents//Defendants
மனுதாரர் தரப்பில் கொடுக்கப்படும் பத்திரிக்கை விளம்பரம்
மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தொடர்ந்துள்ள பாகப்பிரிவினை வழக்கில் 09.10.2025 அன்று தீர்ப்பாணை வழங்கப்பட்டு, அதன்படி மனுதாரருக்குரிய 1/2 பாகத்தை தனியாகப் பிரித்து சுவாதீனம் பெறுவதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதிநிலை தீர்ப்பாணை மனு I.A.No.1/2026ல், 1 மற்றும் 2ம் எதிர்மனுதாரர்களுக்கு பலமுறை சம்மன் அனுப்பியும் சர்வ ஆகாத காரணத்தினால், மேற்கண்ட இரு எதிர்மனுதாரர்களுக்கும் சம்மன் சர்வு செய்ய பத்திரிக்கை விளம்பரத்திற்கு உத்தரவாகி, இவ்வழக்கு வரும் 17.11.2026 அன்று மேற்கண்ட நீதிமன்றத்தில் வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட 1 மற்றும் 2ம் எதிர்மனுதாரர்கள் வரும் 17.11.2026 அன்று காலை 10.00 மணிக்கு மேற்கண்ட நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டியது. தவறினால் மேற்கண்ட இறுதிநிலை தீர்ப்பாணை மனு 1 மற்றும் 2ம் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக விசாரித்து தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
S.KARTHIKEYAN, Advocate.

50 சதவீத விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு: அமைச்சர் தகவல்

■ திருவாரூர், நவ. 4–

திருவாரூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல், அரசு கட்டடங்களை திறந்து வைக் கும் நிகழ்ச்சி ஆகியவை நடந்தது.

இதில் கலந்துகொண்டு அமைச்சர் விஸ்வநாதன் பேசியது:

திருவாரூர் மாவட்ட நிர்வாகம், நகராட்சி சார்பில் விருப்பாச்சிகுளம், மடப்புரம் குளம், கிடாரி குளம், துர்க்காலய குளம், இடையன் குளம், புதுத்தெரு குளம், இரட்டை குளம் உள்ளிட்ட 56 குளங்கள், 18 குட்டைகள் தூர்வாரப்பட்டுள்ளன. 254 சேனலில் நீர் தங்கு தடையின்றி செல்லும் வகையில் சுமார் 26.73 கி.மீ தூரத்திற்கு அடைப்பு சரிசெய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஓடம்போக்கியாறு தொடங்கி பழவனங்குடி வரை 8.38 கி.மீ வரை வாய்க்காலில் நீர் வரத்து முறையாக சீர்செய்யப்பட்டுள்ளது. பயிர் காப்பீடு 50 சதவீதம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

முன்னதாக காணொலி வாயிலாக 7 அரசு கட்டடங்களை அமைச்சர் திறந்து வைத்தார். 771 பயனாளிகளுக்கு ரூ. ஆயிரத்து 226.08 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் கலெக்டர் மோகனசந்திரன், எம்பி செல்வராஜ், மன்னார்குடி எம்எல்ஏ காமராஜ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவாரூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடந்த நிகழ்ச்சியில் அமைச்சர் விஸ்வநாதன் பயனாளிக்கு நலத்திட்ட உதவி வழங்கினார். அருகில் கலெக்டர் மோகனசந்திரன், எம்பி செல்வராஜ், மன்னார்குடி எம்எல்ஏ காமராஜ்.

உயிர் உரங்களை பயன்படுத்த அறிவுறுத்தல்

■ நாகை, நவ. 4–

சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் பி.எம். கிசான் திட்டத்தின் 24வது தவணை நிதி விடுவிப்பு நேரலை ஒளிபரப்பு, விளை நிலங்களை காப்போம் விழிப்புணர்வு இயக்கம் நிகழ்ச்சி நடந்தது.

திட்ட ஒருங்கிணைப்பாளர் அருள் ஒளி தலைமை வகித்தார். மாவட்ட வேளாண் துணை இயக்குனர்கள் செல்வி, நைனார்முகமது ஆகியோர் உயிர் உரங்களை பயன்படுத்தி மண் வளத்தை மேம்படுத்துதல், பரிந்துரைகளின் அடிப்படையில் ரசாயன உரங்களின் பயன் பாட்டையும், சாகுபடி செலவையும் குறைத்தல் குறித்து பேசினர்.

தொடர்ந்து பி.எம். கிசான் சம்மான் நிதித் திட்டத்தின் 24வது தவணை நிதி விடுவிப்பு நிகழ்ச்சியில் பிரதமர் மோடி உரையாற்றியதை நேரலையாக விவசாயிகளுக்கு காணொலி வாயிலாக காண் பிக்கப்பட்டது. உழவியல் தொழில்நுட்ப வல்லுனர் கண்ணன் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் இயற்கை உரங்களின் பயன்பாடு குறித்து பேசினார்.

இதேபோல் பயிர் பாதுகாப்பு தொழில் நுட்ப வல்லுனர் சந்திரசேகர், தோட்டக் கலை தொழில்நுட்ப வல்லுனர் ரகு, வேளாண் பொறியியல் துறை உதவிப் பொறியாளர்கள் கிரிதர் சூர்யா உள்ளிட் டவர்கள் பேசினர். ஏற்பாடுகளை வேளாண் அறிவியல் நிலைய பண்ணை மேலாளர், கணினி திட்ட உதவியாளர் கள் செய்திருந்தனர்.

பேங்க் ஆஃப் பரோடா Bank of Baroda 119 FOUNDATION YEAR LEADING WITH TRUST

மன்னார்குடி கிளை
நெ.2, கம்மால தெரு, மன்னார்குடி-614 001.
போன் : 04367-251152/253352
Mail id: mantir@bankofbaroda.co.in

(baanknet போர்ட்டலில் நடத்தப்படும் ஏலத்திற்கான செய்தித்தாள்களில் வெளியிடப்படும் சுருக்கமான விற்பனை அறிவிப்பு)

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV-Aயின்படி (விதி 6(2) மற்றும் 8(6)யை பார்க்கவும்)

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் " என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1) திரு.R.சேகர் த/பெ. ரங்கசாமி, நெ. 3/203, கீழ் அக்கஹாரம், பெருமாள் கோவில் தெரு, மன்னார்குடி-614016. 2) திருமதி.மலர்விழி க/பெ. சேகர், நெ. 3/203, கீழ் அக்கஹாரம், பெருமாள் கோவில் தெரு, மன்னார்குடி-614016. 3) M.இளையராஜா த/பெ. மகாலிங்கம், நெ.29, கோபால சமுத்ரம் தெற்கு வீதி, மன்னார்குடி-614016.

A/c.No.42500600009671, நிலுவை தொகை ரூ.12,54,343.19/- மேலும் 02.11.2026 அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.

அசையாச் சொத்தின் சுருக்கமான விவரங்கள் மற்றும் ஏதேனும் வில்லங்கங்கள் இருப்பின்

திருவாரூர் மாவட்டம், நாகப்பட்டினம் பதிவு மாவட்டம், மன்னார்குடி சார்பதிவு, மன்னார்குடி தாலுக்கா, நெ.38, சேரன்குளம் கிராமம், ரீ.சர்வே நெ.231/7 (பழைய சர்வே நெ.231/1), (பழைய சர்வே நெ.42/10) ஏக்கர் 0.27 சென்டு, 11772 சதுரடி (1093.65 சதுர மீட்டர்). நான்கு எல்லைகள் : கிழக்கு-பாலகப்ரமணியன் வீட்டு இடம், மேற்கு - சுந்தரம் ஐயர் வீட்டு இடம், தெற்கு - வேலர் தெரு, வடக்கு - பெருமாள் கோவில் தெரு.

நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ. 76,00,000/- | டேவணித் தொகை ரூ. 7,60,000/- | ஏல உயர்வு தொகை ரூ. 25,000/-

மின் ஏல தேதி மற்றும் நேரம் 18.12.2026 அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

சொத்தினை பார்வையிடும் தேதி : 25.11.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)
டேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 18.12.2026

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.bankofbaroda.bank.in/e-auction மற்றும் baanknet.com என்ற இணையதள இணைப்பை பார்க்கவும்/வருகைதரவும். மேலும் ஏலதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கிகரிக்கப்பட்ட அதிகாரி செல் : 7594852673 & 9515024578 தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 03.11.2026
இடம் : மன்னார்குடி

அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர்/
பேங்க் ஆஃப் பரோடா